Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 11    [27-09-1993]    திங்கட்கிழமை    ஓசை 221

## அரச எழுதுவினைஞர் பரீட்சை வெட்டுப்புள்ளி வெளியாகியது

அரச எழுதுவினைஞர்கள் போட்டிப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் மாவட்ட அடிப்படையில் வெளியாகியுள்ளன. இவ் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலாக புள்ளிகளைப் பெற்றோர் சகலரும் எழுதுவினைஞர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும், எனினும் இவர்கள் பெற்ற புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையிலேயே ஆட்சேர்ப்பு நடைபெறும் எனவும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். மாவட்ட அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள வெட்டுப்புள்ளிகளின் விபரம் வருமாறு; யாழ்ப்பாணம்-135, மன்னார்-118, வவுனியா-118, முல்லைத்தீவு-110 இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி இதுவரை வெளியிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழீழம் எங்கும் தியாகி திலீபனுக்கு மக்கள் எழுச்சி பூர்வமான அஞ்சலி

## உண்ணாவிரதங்கள் அனுஷ்டிப்பு

[ யாழ்ப்பாணம் ]

தமிழீழ தாயக விடுதலைக்காக தன்னுயிரை தியாகம் செய்த தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிறைவு நாட்களின் இறுதி நாளான நேற்று தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் நேற்று யாழ். குடாநாட்டிலும் வன்னிப் பிராந்தியத்திலும் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்றன.


பறவைக் காவடிகள், தேர் பவனிகள், அலங்கார ஊர்திகள், தெருக் கூத்துக்கள், சரட்டாங்கள், அடையாள உண்ணாவிரதங்கள், சிரமதானப்பணிகள். அஞ்சலிக் கூட்டங்கள் இவ்வாறு பல்வேறு வகையான அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நாள் முழுவதும் மிகவும் உணர்வு பூர்வமாகநடைபெற்றன. இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளில் ...மாக அமைக்கப்பட்ட பந்தலில் பல நூற்றுக் கணக்கான மக்கள் நேற்றுக்காலை முதல் அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என்றபல்வேறு தரப்பிலான மக்களும் இவ் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதபந்தலில் பட்டிமன்றம், நாட்டிய நாடகம், பஜனை, வில்லிசை, கவிதை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா. திரு. தேவர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இவற்றைவிட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மேற்படி உண்ணாவிரதப் பந்தலை நோக்கி பல பறவைக் காவடிகளும் தியாகி திலீபனின் உருவப்படத்தைத் தாங்கிய ஊர்திகளும், தேர்களும் நகர்ந்து வந்தன. மாலை 5 00மணியளவில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது

[4ஆம் பக்கம் பார்க்க]



## இன்று, நாளை படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகு சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## புக்காரா தாக்குதல்

மணலாற்றில் செம்மலை கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலையும் றொக்கற் மோட்டார் தாக்குதலையும் நடாத்தின.

காலை 10-40 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டதுடன் றொக்கற்றுகளும் ஏவப்பட்டன இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## விடுதி இடமாற்றம்

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்போது அமைந்துள்ள வாந்திபேதி விடுதி (சுவராவாட்) விரைவில் இடமாற்றப்படவிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# எமது விடுதலைப் போராட்டத்தை எவராலும் முறியடிக்கமுடியாது

**- இளம்பரிதி**

[யாழ்ப்பாணம்]

''எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும், எமது மக்களின் விடுதலை உணர்வையும் எத்தகைய ஆயுதங்களாலோ அல்லது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலோ அல்லது ஆதிக்கசக்திகளாலோ முறியடிக்கவோ அன்றி மழுங்கடிக்கவோ முடியாது என்பதை தியாகி திலீபனின் தியாகம் செறிந்த போராட்டம் எடுத்துக்காட்டியுள்ளது'' இவ்வாறு தியாகிலெப்.கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வாக நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் நேற்று மாலை நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கூறினார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப்புலிகள் உயிராக நேசிக்கிறார்கள். இதனாலேயே எமது போராட்டமும் அதன் கடந்தகால வரலாறும் இன்றைய உலகத்திற்கே ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறது.

மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் என்றும் சுதந்திர தமிழீழம் மலர வேண்டும் என்றும் தியாகி திலீபன் கண்ட கனவு தற்பொழுது நனவாகி வருகிறது. தற்பொழுது தமிழீழ மக்கள் தங்களை அறியாமலேயே புரட்சி செய்து வருகின்றனர்.

தற்பொழுது சிறிலங்கா சிங்கள இனவாத அரசு யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

வும் உணர்வு பூர்வமாகநடைபெற்றன. இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டு தமது இதய பூர்வமான அஞ்சலிகளை செலுத்தினர்.

யாழ். குடா நாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய கோட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. குடாநாடு முழுவதும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது.

**வலிகாமத்தில்:-**

குடாநாட்டின் வலிகாமம் பகுதியில் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்து தியாக மரணத்தைத் தழுவிக் கொண்ட நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் விசேட



தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் நேற்று நல்லூரில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தேசியக் கொடியை ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

...வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வாந்திபேதி விடுதி அமைந்துள்ள பகுதியில் கணிசமான பொதுமக்கள் நடமாடுவதினாலும், எதிரே சிறுவர் விடுதி, மற்றும் யாழ். போதனா வைத்தியசாலைக்குரிய கிணறு அவ்விடத்தில் அமைந்திருப்பதை காரணமாக கொண்டே இவ்விடுதியை மாற்ற வைத்தியசாலை தீர்மானித்துள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### ஆங்கில ஆசிரியர் பயிற்சி

வவுனியாவுக்கும் நீர்கொழும்பு பொலவலானைக்கும் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கு அழைக்கப்பட்டவர்கள் அங்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை எனவும் அப்பயிற்சியினை யாழ்ப்பாணத்தில் வழங்குவதற்கான சகல ஒழுங்குகளும் தேசிய கல்வி நிலைய அதிகாரி திரு. நிசால்குரேயுடன் கதைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் எஸ். தெய்வபாலன் சகல அறிவுறுத்தல்களுடனும் கொழும்பிலிருந்து இப் பயிற்சிக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவாரெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படிப்படியாக எமது போராட்டம் வளர்ச்சி பெற்று வருகிறது

**-கந்தண்ணா**

(தென்மராட்சி)

காலம் காலமாக எமது மண்ணில் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு. அழிக்கப்பட்டு வந்த எமது மக்களின் உரிமைகளுக்காக 1972-ம் ஆண்டில் எமது தலைவர் இப்போராட்டத்தை ஆரம்பித்தார். அன்றிலிருந்து எமது இவ்விடுதலைப் போராட்டமானது படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கிறது.

இவ்வாறு தென்மராட்சியில் நேற்று நடைபெற்ற தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா தெரிவித்தார். பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது போராட்டத்தின் வளர்ச்சியைக்கண்டு அஞ்சிய சிறிலங்கா அரசு அதற்கு ஈடுகொடுக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபனின் கனவை நனவாக்க முயலவேண்டும்

**பொன் தியாகம்**


(வடமராட்சி)

''நாங்கள் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் மத்தியில் வாழ்கின்றோம். எங்களைக் கொன்று எமது மண்ணை அபகரிக்க எதிரி எங்களைச் சுற்றி வட்டமிட்டு நிற்கிறான்'' இவ்வாறு தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக நேற்று வடமராட்சி கோட்டத்தில் மாலி சந்தியில் வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. பா பைத் தமிழன் தலைமையில் நடைபெற்ற உண்ணா நோன்பு பொதுக் கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நாங்கள் பெற்றெடுத்தவர்கள் தான் மாவீரர்கள். போராளிகள், தியாகி திலீபன் உங்களைப் போன்று கல்வி பயின்றவன், உங்களைப் போன்று விளையாடித்திரிந்தவன். உங்களுக்கு இருக்கின்ற பந்த பாசங்கள் போல் அவனுக்கும் நிறைய உண்டு. திலீபனின் இறப்பு இந்திய அரசைக் கலங்க வைத்த நிகழ்வு.

நாங்கள் ஒவ்வொரு வருடமும் திலீபனைப் பற்றி வரலாறு பேசுகிறோம். இது ஒரு மீட்டல் பாடம். தொடர்ந்தும் வரலாறு பேசுவதை நாம் நிறுத்திக்கொண்டு அவனது கனவை நனவாக்கமுயல வேண்டும். அவனதுகனவுகளில் ஒன்றான மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் என்பதே. ஆறு ஆண்டுகளாக மக்கள் புரட்சி வெடிக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்

# புலிகளின் தாக்குதலில் 2 விமானப்படையினர் பலி

## மொறவேவாவில் சம்பவம்

(கொழும்பு)

திருகோணமலைமாவட்டம் மொறவேவாவுக்கு அண்மையில் சிறிலங்கா விமானப்படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு விமானப்படையினர் கொல்லப்பட்டனர்;ஐவர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த விமானப் படை அணியினர் மீதே புலிகள் அதிரடித் தாக்குதலை நடாத்தியதாக கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பன்மதவாச்சிய பகுதியிலும் வேறொரு மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள்நேற்று அறிவித்தன.

# புலிகளின் தாக்குதலுக்கு 2சிங்களஊர்காவல்படைபலி

முல்லைத்தீவு மாவட்டம் சாபபன்குளம் பகுதியில் சிங்கள ஊர்காவல் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட மோதலில் சிங்கள ஊர்காவல் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இம்மோதலின் போது அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால கைப்பற்றப்பட்டன.

| | | |
|---|---|---|
| 303 ரக துப்பாக்கிகள் | - | 02 |
| ரவைக்கூடுகள் | - | 02 |
| ரவைகள் | - | 17 |
| கத்திகள் | - | 03 |

என்பனவே சிங்கள ஊர்காவல் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டவையாகும்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

# பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணை வீச்சு

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மண்டை தீவு இராணுவத்தினர் பாதுகாப்பு வலயத்திற்குள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் இருவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று மாலை 7.30 மணியளவில் மண்டைதீவு பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் நகரை நோக்கி எறிகணைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வினாவிடைப் போட்டி

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் வினாவிடைப் போட்டி ஒன்றை நடாத்துகின்றது. வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம், குலசி றேட்ஸ் கல்வியங்காடு. முடிவு திகதி 10-10-93 (6113)

### விற்பனைக்குண்டு

இங்கிலண்ட் பெற்றர் எஞ்சின் குதிரை இழுவை 3 RPM 2800 மின் சக்தி இழுவை 2. நேரில் தொடர்பு கொள்ளவும் S S R. அரிசி ஆலை டச்சுவீதி 1-ம் கட்டை, சாவகச்சேரி. [6084]

### வாங்கப்படும்

பாவிக்கப்பட்ட பிளாஸ்ரிக் துப்புத்தடிகளின் நல்ல நிலையிலுள்ள பிளாஸ்ரிக் உறைகள் ரூபா 10.00 விலைப்படி தொகையாகவும் சில்லறையாகவும் வாங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அந்திவனம் விற்பனை நிலையம் ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (சி-7492)

## நோய்கள் தீவிரம் 332பேர் ஆகஸ்ட்டில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வயிற்றோட்டம் செருப்புக்காய்ச்சல் ஈரல்சம்பந்தமான நோயினால் ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் சுமார் 332பேர் பாதிப்படைந்திருப்பதாக யாழ் பிராந்திய சுகாதார வட்டாரங்கள் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது.

வயிற்றோட்ட நோயினால் 166பேரும், செருப்புக்காய்ச்சலால் 155பேரும், ஈரல் சம்பந்தமான நோயினால் 11பேரும் பாதிப்படைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## பொது நூலகத்திற்கு

தேநீர்க் கடைகள், உணவகங்களில்

## உணவுக் கையாளபவர்களுக்கு வைத்திய பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

தேநீர்க் கடைகளிலும், உணவகங்களிலும் தின்பண்டங்களைக் கையாள்பவர்களுக்கு வைத்தியபரிசோதனை செய்யப்படவுள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உணவகங்களில் தின்பண்டங்களைக் கையாள் வர்களுக்கும், பரிமாறுபவர்களுக்குமே வைத்திய பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

வைத்திய பரிசோதனையின் போது சுதேகிகளாகக் காணப்படாதவர்கள் உணவகங்களிலும், தேநீர்க் கடைகளிலும் உணவு பரிமாறுவர்களாகப் பணிபுரிய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார் இத்திட்டம் 1-1-94 முதல் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

அதேவேளை உணவு கையாள்பவர்கள் சுகாதாரத்தைப் பேணுவதின் அவசியம் பற்றி மூன்று நாள் கருத்தரங்கு வரும் நவம்பரில் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் நடைபெறவுள்ளது. உணவு பரிமாறுபவர்கள் இந்தக் கருத்தரங்கில் கட்டாயமாகப் பங்கு பற்ற வேண்டுமெனவும் அதே வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

### பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் நினைவுதினம் அனுட்டிப்பு

தியாகி திலீபனின் நினைவு தினம் கடந்த 15-09 93ஆம் திகதி தொடக்கம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்தில் தினமும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஆரம்ப நாளன்று வெப். சந்திரனின் தாயார் ஈகைச் சுடரேற்றி வைக்க நினைவு தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. தினமும் தியாகி திலீபனின் படத்துக்கு மலரஞ்சலி செய்யப்பட்டு வருவதுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்களினால் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

தியாகி திலீபனின் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்களினால் கடந்த 22-09 93 ஆம் திகதி சதுமங்கலகுணவீதி புனரமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டுள்ள தோடு நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

### நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்கு புல் சுகாதார அத்தியட்சகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் ஒன்றரை வருடங்களாக இப் பதவி வெற்றிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை இந்த நியமனம் கூட பதில் நியமனமாகவே கருதுவதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## வசதிகுறைந்த மாணவர்க்கு இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணக் கல்விப் பிரதேசத்தில் உள்ள வசதிகுறைந்த கண்பார்வை குறைவாக உள்ள மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்க யாழ் பிரதேச கல்வித்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறுள்ள மாணவர்களின் பெயர்களை கோட்ட ரீதியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை யாழ். பிரதேச கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது. அத்துடன் இவர்களுடைய கண்பார்வை தொடர்பாக கண்வைத்திய நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்பட்ட வைத்திய அறிக்கையையும் இணைத்து அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் பணித்துள்ளார். (17)

## 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



தோற்றம் 03 09-1917

மறைவு 29-08-1993

அமரர்

## சின்னத்தம்பி சின்னத்துரை

"தாயகம்" இல்லம், 195B கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

கடமை வீரனாய் கண்ணியமாய் வாழ்ந்து மறைந்த எம் இல்லத் தலைவனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதி சடங்கிற்கு வருகை தந்து எமது துயரில் பங்கேற்றோருக்கும், ஆறுதல் மொழி கூறி எமை தேற்றியோருக்கும் அமரத்துவம் எய்திய பின் பல வகைகளிலும் உதவியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் பல.

28-09-93 நாளை எம்மில்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், எம் அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வறிவித்தலை தனித்தனியே கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி மகேஸ்வரி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/7490)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04-12-1987

உதிர்வு: 08-10-1992

## பனைவளப் போட்டியும் மாபெரும் கண்காட்சியும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியும் முல்லைத்தீவு, வன்னி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து பனைவளப் போட்டிகளையும் மாபெரும் கண்காட்சியினையும் நடாத்தவுள்ளனர்

இந்தப் போட்டிகளும், கண்காட்சியும் ஐப்பசி மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.

பனம் பழச் சாற்றிலிருந்து புதிய உணவு தயாரிக்கும் போட்டிக்கு முதலாம் பரிசாக ஒரு பவுண் எடையுள்ள தங்கப்பதக்கமும் இரண்டாம், மூன்றாம் பரிசாக முறையே 3000ரூபாவும், 2000ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கண்காட்சியை ஒட்டி நடைபெறவுள்ள பனைசார் கைப்பணிப் பொருள்களுக்கான போட்டிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன், அனைத்து போட்டிகளிலும் பங்கு பற்றுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. முல்லைத்தீவு, வன்னி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அனைவரும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம்.

## விசேட அறிவித்தல்

யாழ் மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக சீமெந்து கட்டிட தொழிலாளரின் (மேசன், மேசன் உதவியாளர், வர்ணம் பூசுவோர்) நலன் கருதி அங்கத்தவர் அட்டைகள் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

யோசப் தாவீது

மாவட்ட செயலாளர்.

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்.

(6107)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

### நெல்லியடி வர்த்தகர் சங்கம்

நெல்லியடி வர்த்தக நிலையங்களை இரவு நேரம் காவல் புரிவதற்கு உத்தியோகத்தர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தகைமைகள்: நெல்லியடியிலிருந்து ஐந்துமைல் சுற்றளவிற்குள் வசிப்பவர், வயது 20-50க்குள் இருக்கவேண்டும்.

29-9-93 மாலை மூன்று மணிக்கு நெல்லியடி வர்த்தகர் சங்கக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் சகல அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

(5854)

நூலகத்திற்கு
புத்தகங்கள்
[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை நூலகத்திற்கான ஒரு தொகுதி புத்தகங்கள் கொழும்பில் இருந்து 'குமண' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு யாழ் மாநகரசபைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந் நூலகத்திற்கான மிகுதி நூல்கள் 'குமண' கப்பல் இம் முறை கொழும்பு சென்று திரும்பி வரும்போது எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் யாழ் மாநகரசபை நூலகத்திற்கு பல்துறை சார்ந்த போதிய அளவான நூல்களைக் கொள்வனவு செய்யவும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சவுக்கமரம் நாற்று மேடை
(பருத்தித்துறை)


தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நகரில் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் சவுக்க மரங்களை நாட்டுவதற்கென "சவுக்கம் நாற்று மேடைகள்" போடப்பட்டுள்ளன. இந் நாற்று மேடைகளை அமைக்கும் நடவடிக்கைகளை ராஜன்நகர் முகாம் பொறுப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு மேற்கொண்டிருந்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ராஜன் கிராமத்தில் மரம் நாட்டும் இயக்கம் ஒன்றையும் வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (25)

...தள்ளார் (17)

## வீதிகள் புனரமைப்பு


வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகப் பகுதியில் உள்ள நான்கு முக்கிய வீதிகள் திருத்தி புனரமைக்கப்பட்டு வருகின்றன. நாகர் கோவில் - கவுத்தந்துறைவீதி, 75,000 ரூபா செலவிலும் குடாரப்பு ஊரெல்லை வீதி, 75,000 ரூபா செலவிலும், பொற்பதி - பிள்ளையார் ஆலயவீதி, 75,000 ரூபா செலவிலும் அம்பன் சுடலைவீதி 25,000 ரூபா செலவிலும் திருத்தி புனரமைக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வீதிப் புனரமைப்பு வேலைகளை வடமராட்சி பிரதேச சபைக் கொறுப்பேற்றுச் செய்துவருகின்றது (25)

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு
13
—
08
—
43

உதிர்வு
7
—
10
—
92



மலர்வு
22
—
03
—
82

**மனோன்மணி நாகமுத்து** **ஸ்ரீநந்தகோபாலா**

திதி: 27-9-1993

நீலத்தை வெட்கவைக்கும் நித்திலமாய் நீயொளிர்ந்துன்
கோலத்தைக் காட்டிக் குளிர்வித்தாய் - ஞாலத்தில்
இல்லையென் றிரட்போர்க்கு இல்லையென் றுரையாத
நல்லமனோன் மணியிவள்.

அங்கத்தைத் தங்கமாய் ஆக்கிப் படைத்த எங்கள்
சிங்கத்தை அழித்தானே சிங்களவன் - சங்கொத்த
வீரத் திருமகனே வெற்றித் தமிழ் மறவா
யாரைத்தான் விட்ட தரசு.

கடந்த 1992-ம் ஆண்டு 10-ம் மாதம் 7-ம்திகதி கிளாலிக் கடலில் பிரயாணம் செய்யும் பொழுது சிறிலங்கா அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்டு உருத்தெரியாமல் அழிந்துபோன தாயும்சேயும். இவர்கள் இறைவனில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

கோவில் வீதி,
மல்லாகம். (6112)

— நாகமுத்து. தெய்வநாயகி. மூத்து இராசேந்திரம் குடும்பத்தினர்.

# திருநாவுக்கரசு செந்தூரன்

கொஞ்சும் மொழி பேசிடும் பிஞ்சு வயதினில் நெஞ்சம் வெடிக்க எமைவிட்டு பிரிந்தாயோ! செந்தூரா! மதிய உணவை உண்டுவிட்டு விதி உமை அழைத்தமையைச் சொல்லாமல் பூவின் மயக்கத்தில் நீரில் ஆழ்ந்து சென்றீரோ! செந்தூரா!

எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்தாலும் உமது பசுமையான சிந்தனைகள் எமைவிட்டு ஓடவில்லை

உமது பிரிவால் வாடும்
அன்பு அம்மா, அப்பா, சகோதர,
சகோதரிகள், உற்றார்,
உறவினர்கள். (6108)

26/7 அராலி வீதி
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

# 31-ம்நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்
13. 03. 1945
மண்ணின் மடியில்
28. 08. 1993
திதி
27. 09. 1993



## திருமதி பத்மாவதி கதிரவேல்

சிரித்து மலர்ந்த செந்தாமரை முகமும்
இலட்சுமிகரம் இலங்கும் இயற்கைத் தோற்றமும்
பூத்து எங்கள் இதயங்களில் என்றும்
இலங்கிக் கொண்டேயிருக்கும். சாந்தி! சாந்தி!

கணவர்: கதிரவேல், பிள்ளைகள்: குணாளன், குணசிறீ, பிறேமசிறீ சகோதரி: லோகநாயகி மற்றும் சகோதரர்கள், பெறாமக்கள், மைத்துனிமார், மைத்துனர், மருமக்கள்.

"பத்மா இல்லம்"
தன்னாலை வடக்கு
கரவெட்டி (6059)

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-09-27

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

★ **ராஜன்/ஜெயம்** (நாகராசா ஜெயராசா - தம்பலகமம் - திருமலை)

1988ஆம் ஆண்டு கணேசபுரத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**மோகன்** (சோமசுந்தரம் விமலதாஸ் - ஓமந்தை - வவுனியா)

1990ஆம் ஆண்டு திருமலை - மூதூர், வெருகல் பகுதியில் தவறுதலான துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த-

**மது** (அப்புசாமி செல்லத்துரை - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அருள்** [வேலுப்பிள்ளை சிவகுமாரன் - மருதோடை, நெடுங்கேணி - மணலாறு]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழிளைஞர். குறிஞ்சாமுனைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' நாளிதழ் காரியாலயத்தின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட காரியாலய ஊழியரான பொதுமகன்.

1991ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த-

**சாள்ஸ்** [— மகாதிமராசா - தாண்டவன்வெளி - மட்டு]

இதேதினம் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த-

**ஈசன்** [சிதம்பரப்பிள்ளை அசோக்குமார் - 155-ம்கட்டை - கிளிநொச்சி]

1992ஆம் ஆண்டு ஆனையிறவு கடனீரேரியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கரிகாலன்** [சிதம்பரநாதன் காண்டீபன் - வற்கோவளம் - பருத்தித்துறை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
[ஓ-7498]

### சிந்தனைக்கு

இன்னுமொருவர் எவரையும், அவர் இசைவின்றி ஆளும் தகுதி எந்த மனிதனுக்கும் இடையாது என்பதை நான் உணர்த்துவேன்.

– ஆபிரஹாம் லிங்கன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## ஹமீத்தின் குழப்பம்

ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர், ஏ. சி. எஸ். ஹமீத் நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர், அதிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர் பிரச்சினையின் சகல பரிணாமத்தையும் விளங்கிக் கொண்டுள்ளவர். இன பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் பலவற்றில் பங்கேற்றவர். இதன் காரணமாக, இனப்பிரச்சினை விடயத்தை தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை விட நன்கு அறிந்தவர் என்பதிலும் தப்பில்லை.

இந்நிலையில், அமைச்சர் ஹமீத் சில தினங்களுக்குள் இனப்பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்துள்ள கருத்துக்கள் சில யதார்த்தத்தைப் பிரதிபலிப்பனவாகவும், சில ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டவையாகவும் சில அவரின் குழப்பத்தை வெளிக்காட்டுபவையாகவும் உள்ளன.

சில தினங்களுக்கு முன் அக்குறணையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமைச்சர் "நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு இராணுவத்தீர்வு காணப்படுதல் கூடாது. பரஸ்பரம் நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட்டு பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்" என தனது அபிப்பிராயமாக வெளியிட்டார்.

அமைச்சரின் இவ் அபிப்பிராயமானது, அவரது நீண்ட அரசியல் அனுபவத்திற்கும் யதார்த்த நிலைக்கும் ஏற்றது போலவே இருந்தது. அதாவது,

# சந்திரசேகரன் பதவி ஏற்பது பாதுகாப்பிற்கு ஆபத்து

## ஜெனரல் ஹமில்டன் வனசிங்க

(கொழும்பு)

மத்திய மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பெரியசாமி சந்திரசேகரன் சத்தியப்பிரமாணம் செய்வது தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டே மறுக்கப்பட்டுள்ளது என்று புதிய பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த வால்ட்டர் பெர்னாண்டோ கடந்த இரண்டாம் திகதி மலையக மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், இந்த விவகாரத்தை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இப்போது புதிதாக நியமனம் பெற்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடந்த 10ஆம் திகதி மேற்படி கட்சிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், தற்போதைய சூழ்நிலையில் உள்ள தேசிய பாதுகாப்புக் கருதி தங்களின் கோரிக்கையை என்னால் ஏற்பதற்கில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

## 25 சமாதான நீதவான்கள் லஞ்சம் காரணமாக பதவி இழப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முழுவதிலும் 25க்கு மேற்பட்ட சமாதான நீதவான்களின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன,

போலி ஆவணங்களுக்கு கையொப்பமிட்டமை மற்றும் சட்டவிரோத நடவடிக்கைக்கு தொடர்பு வைத்திருந்தமை போன்ற பல்வேறு காரணங்களுக்காக இவர்களின் பதவிகள் பறிக்கப்பட்டதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறான ஆவணங்களுக்கு கையெழுத்து இடுவதற்கு ரூபா 50 முதல் ரூபா 15,000 மட்டில் லஞ்சமாக பெற்றுக் கொண்டிருப்பதாகவும் மிக விரைவில் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## பலவத்தை தடுப்பு முகாம் மூடிவிடத் திட்டம்

பலவத்தை புனர் வாழ்வு முகாமில் வைக்கப்பட்ட சிறைக்கைதிகள் மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்

பலவத்தை புனர்வாழ்வு முகாமை சிறிலங்கா அரசாங்கம் மூடிவிடுவதற்கு எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டமை காரணமாகவும் இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீண்டும் மகசின் தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தையல் கண்காட்சி

(கொழும்புத்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை, யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் கண்டுக்குளியிலுள்ள பிரிவுப் பணிமனையில் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு தையல் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் சகல உறுப்பினர்களையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அண்ணம் பிரிவுச் செயலாளர் திரு எஸ் கந்தையா தெரிவித்துள்ளார் (24)

## திருத்தம்

ஏழை மக்களின் நிவாரணத்தை ஏப்பமிடும் ஐ நா. அதிகாரிகள் என்ற தலைப்பில் கீழ்பாலை மாறன் எழுதி கடந்த வெள்ளி மஞ்சரியில் பிரசுரமான கட்டுரையில் கருத்து மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில அச்சுத் தவறுகள் நேர்ந்துவிட்டன.

இரண்டாவது பந்தியின் 22 ஆவது வரியில் வரும் நீதிக்குழு என்பதை நிதிக்குழு என்றும், நாலாம் பந்தியின் 35ஆவது வரியில் வரும் 7 மில்லியன் என்பதை 7 பில்லியன் என்றும்; ஆறாம் பந்தியின் 13 ஆவது வரியில் வரும் பருசத்தாலும் என்பதை பஞ்சத்தாலும் என்றும்; ஏழாவது பந்தியில் வரும் NCTAD என்பதை UNCTAD என்றும்; எட்டாவது பந்தியின் 14ஆவது வரியில் வரும் இயக்கங்கள் என்பதை இலக்கங்கள் என்றும் திருத்தி வாசித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## பல்கலை மாணவருக்கு மண்ணெய் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கும் இன்று திங்கட்கிழமை முதல் நான்கு லீற்றர் மண்ணெய் வீதம் வழங்கப்படவுள்ளது

இன்று 27ஆம் திகதி விஞ்ஞானபீட மாணவர்களுக்கும், 28ஆம் திகதி வர்த்தகம், முகாமைத்துவம், சித்தமருத்துவம், ராமநாதன் நுண்கலைப்பீடங்களுக்கும் அடுத்த மாதம் 01ஆம், 05ஆம் திகதி முறையே கலைபீடம் மற்றும் மருத்துவபீட மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## பொது அறிவுப்போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன

யாழ். இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றம் நங்கூரம் இதழின் ஆதரவில் நடாத்திய பொது அறிவுப் போட்டியின் மேற்பிரிவில் முதலாம் இடத்தை பொ. ஹில்டன் நரேந்திரன் பெற்றுக் கொண்டார். இரண்டாம் இடத்தை செல்வி த. சுகர்ணாவும், மூன்றாமிடத்தை க. முருகதாசும் பெற்றுக் கொண்டனர்.

மத்திய பிரிவுப் போட்டியில் ஆ.செந்தூரன் முதலிடத்தையும், ஆ. பிரசாந்தன் இரண்டாமிடத்தையும், செ.பகீதரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கீழ்ப்பிரிவு போட்டிகளில், சேயிநாத் முதலிடத்தையும், அ. கிறிஸ்ரா நிஷாந்தினி இரண்டாமிடத்தையும், அ இளங்குமரன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

## இன்று பெற்றுக் கொள்ளவும்

கல்வித் திணைக்களத்திற்கு வெண்கட்டிக்கும் கரும்பலகை மைக்கும் விண்ணப்பித்த சகல பாடசாலை அதிபர்களும் தமக்கென ஒதுக்கப்பட்டவற்றை இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை யாழ் இந்துக் கல்லூரியில் ரொக்கத்தையோ அல்லது பாடசாலைக் காசோலையையோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் எனவும்,

வெண்கட்டிப் பெட்டி ஒன்றின் விலை ரூபா. 25/-ம் கரும்பலகை மை ½ லீற்றர் ரின்னின் விலை ரூபா 120/-ம் ஆகும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இஸ்ரேல்-அரபாத்ஒப்பந்தம்; ஆதரித்தவர் சுட்டுக்கொலை

(ஜெரூசலேம்)

இஸ்ரேலிய பாலஸ்தீன சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்து பேசிவந்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர் கடந்த செவ்வாய் காஸா பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இதே சமயம் ஒப்பந்தம் மூலம் பாலஸ்தீனியர்களுக்கு இடையிலான உட்பூசலை தீர்த்து வைக்க முடியாது என தீவிரவாத இஸ்லாமிய இயக்கமான ஹமாஸ் படுகொலை நடைபெற்ற ...

### பாராளுமன்றக் கலைப்பை எதிர்ப்போர்

# பதவி நீக்கம் செய்யப்படுவர் ரஷ்ய அதிபர் எச்சரிக்கை

(மாஸ்கோ)

நீண்ட அரசியல் அனுபவத்திற்கும் யதார்த்த நிலைக்கும் ஏற்றது போலவும் இருந்தது. அதாவது, தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவரீதியாக தோற்கடிக்க முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

ஆனால், இரு தினங்களின் முன் பி.பி. ஸிக்குப் பேட்டி அளித்த அமைச்சர் ஹமீத் தெரிவித்த கருத்துக்கள் அவரின் இரண்டும் கெட்டான் தனத்தையும் குழப்பத்தையும் காட்டுவது போல் தெரிகிறது. அதாவது "இன்று இலங்கையில் உள்ளது ஒரு சர்வதேச பிரச்சினையல்ல. எனவே இதற்கான தீர்வை நாமே தேடவேண்டும். பயங்கரவாதம் இருப்பதினாலேயே இனப்பிரச்சினைக்கு இன்றுவரை தீர்வு ஏற்படவில்லை. எனவேதான் பயங்கரவாதப் பிரச்சினையை தீர்க்கவேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார்" என அமைச்சர் ஹமீத் குறிப்பிட்டுள்ளார். அவரின் இப்பேச்சானது அரசாங்கத்தின் குரலாக அவர் பேசுவது போல இருப்பினும், அமைச்சரவையில் அங்கம் வகிப்பவன் என்ற ரீதியில் அவரது குரலாகவுமே கருதவேண்டி உள்ளது.

இதேவேளை, இதே பேட்டியில், "அரசாங்கம் வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசி ஓர் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த தயாராகவே உள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளமையானது அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக கடைப்பிடிக்கும் இன்றைய வெளிப்படையான போக்கிற்கும், இதேவேளை, அமைச்சர் அதே பேட்டியில், இதற்கு முன் தெரிவித்த கருத்திற்கும் முரண்பாடானதாகும்.

அதாவது, ஒருபுறம் 'பயங்கரவாதம்' என்றும், அதற்கு இராணுவத்தீர்வு என்றும் குறிப்பிடும் அமைச்சர் ஹமீத், மறுபுறம் இனப்பிரச்சினை; அது ஒரு தேசியப் பிரச்சினை; புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றதெனவும் குறிப்பிடுகின்றார். இது இனப்பிரச்சினை தொடர்பான பரிணாமத்தை நன்கு விளங்கிக் கொண்டுள்ள அமைச்சர் ஹமீத் கடைப்பிடிக்கும் இக் குழப்பமான நிலைப்பாடாகும். இது அவரின் அரசியல் விளங்காத் தனத்தால் விளைந்த தொன்று எனக் கூறிவிடமுடியாது. அவரின் அரசியல் லாப நட்ட கணக்கில் விளைந்த முடிவு என்றே கூறமுடியும்.

ஆனால், அமைச்சர் ஹமீத் போன்ற மூத்த அமைச்சர்கள், இவ்வாறான குழப்பமான அரசியல் வழியை கடைப்பிடிப்பது அவர்கள் வற்புறுத்தி வரும் அமைதியையும், சமாதானத்தையும் ஒரு போதும் ஏற்படுத்தி விடப்போவதில்லை. மூத்த அமைச்சர் என்ற ரீதியிலும் அவருக்கும் நற்பெயரை ஏற்படுத்திவிடப் போவதில்லை. மாறாக இலங்கைக்குக் கெடுதலையே ஏற்படுத்தும். இந்நிலையில் அமைச்சர் ஹமீத், இனப் பிரச்சினை தொடர்பாக யதார்த்த பூர்வமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே பிரச்சினை தீர்விற்கு உதவக்கூடும்.

தலைவர்களில் ஒருவர் கடந்த செவ்வாய் காஸா பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கொலைஞர்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

மூசமட் ஹசீம் அபுசாதாம் என அழைக்கப்படும் இவர் பாலஸ்தீன-இஸ்ரேலிய ஒப்பந்தத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சில மணிநேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாத இஸ்லாமிய இயக்கமான ஹமாஸ் படுகொலை நடைபெற்ற சில மணிநேரங்களின் பின் வெளியிட்ட செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதான உடன்படிக்கைக்கைச்சாத்திட்டபின் முக்கிய பாலஸ்தீன தலைவர் ஒருவர் முதற் தடவையாக கொல்லப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்கு எதிரான பகை அரபுக்கள் கைவிட வேண்டும்

### இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் கோரிக்கை

(டெல்அவிவ்)

இஸ்ரேலுக்கு எதிரான போரையும், வர்த்தகத் தடையையும் விலக்கிக் கொள்ளுமாறு இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேலிய தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இஸ்ரேல் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் அரபு நாடுகள் இனி மேலும் பகைமை வாதப் போக்கைக் கைவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

1973இல் மேற்காசியப் போருக்குப் பின்னர் இஸ்ரேல் மீது வர்த்தகத் தடையைப் பல அரபுநாடுகளும் விதித்திருந்தது தெரிந்ததே.

கர்நாடகாவில்

## மாநில அமைச்சர்கள் 28 பேர் பதவி துறப்பதாக அறிவிப்பு

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் மாநில அமைச்சரவையின் 28 உறுப்பினர்கள் தமது ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று மாநில முதல்வர் வீரப்ப மொய்லி தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், சர்ச்சைக்குரிய துணை முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா உட்பட ஆறு அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வதற்கு தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தற்போது பெங்களூரில் இல்லாத ஐந்து அமைச்சர்களும்கூட தமது ராஜினாமாக் கடிதங்களை அனுப்பிவைக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரவையை முற்றாக திருத்தி அமைப்பதற்கு முதல்வர் வீரப்ப மொய்லிக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையிலேயே அமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்கள் எழுதப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

## அடுத்த ஒலிம்பிக் போட்டி சிட்னி நகரில் நடைபெறும்

(சிட்னி)

அடுத்த ஒலிம்பிக் உலக விளையாட்டு விழா அவுஸ்திரேலியத் தலைநகர் சிட்னியில் 2000ஆவது ஆண்டில் நடைபெறவுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் மொன்டிகார்லோவில் இதனை அறிவித்தார். இந்த ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்காக பீகிங், மான்செஸ்டர், பேர்லின், இஸ்தான்புல் ஆகிய நகரங்களும் விண்ணப்பித்து இருந்தன என்பதும், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் 1956ம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பின்னர் இப்போது இது இரண்டாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதால் அவுஸ்திரேலியாவுக்குப் பத்தாயிரம் டாலர்கள் வரையில் வருமானம் கிடைக்கலாம் என்று பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

(மாஸ்கோ)

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குத் தான் எடுத்த முடிவை எதிர்க்கும் அதிகாரிகள், மற்றும் படையினர் எவரும் பதவி நீக்கப்படுவார்கள் என்று ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அக்கட்டிடத்தை விட்டு வெளியே வர மறுக்கும் முந்நூறு உறுப்பினர்கள் காட்டும் எதிர்ப்பு படிப்படியாகத் தணிந்து வருவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் தனது முடிவை நாட்டின் பாதிக்கும் அதிகமான பிராந்திய சபைகள் எதிர்ப்பதாகக் குறிப்பிட்ட அதிபர் யெல்ட்சின் எனினும், பிராந்திய ஆளுநர்கள் அனைவரும் தம்மை ஆதரிப்பதாகவும் அவ் உரையின்போது தெரிவித்தார்.

## அடக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து போரிடுவோம்

### ரஷ்ய சபாநாயகர் பிரகடனம்

[மாஸ்கோ]

ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சினின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக மாஸ்கோவிற்கு வெளியே உள்ள நகரம் ஒன்றிலிருந்து போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்று கலைக்கப்பட்ட பாராளுமன்ற அங்கத்தினர் சிலர் கூறியுள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகள் சிறப்பு பாராளுமன்ற மையம் ஒன்றை ஏற்படுத்துவார்கள் என்று கூறிய ரஷ்ய பாராளுமன்றச் சபாநாயகர் குஷ்பான் கஷ்புலட்டோவ் மேலும் கூறுகையில், ரஷ்யாவில் தற்போதுள்ள பாராளுமன்றக் கட்டிடத்தினுள் சுமார் முந்நூறு அங்கத்தவர்கள் மின்சாரமும் தகவல் தொடர்பு வசதியும் இன்றி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே ரஷ்யாவின் அரசியல் நெருக்கடி தொடர்பாக ஆராய ரஷ்ய பெடரேஷன் உறுப்பினர்களின் ஒரு நாள் கூட்டம் செண்ட் பீட்டர்ஸ்பார்க் நகரில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மாஸ்கோவானொலி கூறியுள்ளது. மொத்தமுள்ள 88 உறுப்பினர்களில் சுமார் 34 பேர் மட்டுமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா. டாங்கி சேதம்

ஐ.நா. படையினருக்கும் சோமாலியக் கிளர்ச்சியாளருக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு மோதலில் ஐ.நா. டாங்கி ஒன்று சேதமானது. மத்திய மொகதிசு நகரில் இச்சம்பவம் நடைபெற்றது. சோமாலியாவிலுள்ள அமெரிக்க, பாகிஸ்தானிய படையினர் பாதுகாப்பு வேலியொன்றை அகற்ற முனைந்தபோது இம்மோதல் ஏற்பட்டது.

## மாஸ்கோவை முற்றுகையிட பிராந்தியங்கள் முயற்சி

### அதிபர் யெல்ட்சினுக்கு எதிர்ப்பு வலுக்கிறது

(மாஸ்கோ)

ரஷ்ய பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை அதிபர் யெல்ட்சின் செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக ரத்துச் செய்யாவிடில் மாஸ்கோ நகரை முற்றுகையிடப் போவதாக 88 பிராந்தியங்களின் தலைவர்கள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

பாராளுமன்றத்திற்கும், அதிபர் பதவிக்கும் ஓரே நேரத்தில் தேர்தல்நடத்த உத்தரவிடும் படியும், இந்த இறுதி எச்சரிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்ய அதிபரால் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் ஆதரவாளர்களுக்குத் தானியங்கி ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாக மாஸ்கோ வானொலி கூறியுள்ளது

சட்டவிரோதமாக விநியோகம் செய்யப்பட்டிருக்கும் இவ் ஆயுதங்களை மீட்கும்படி பாதுகாப்பு அமைச்சுக்கு அதிபர் யெல்ட்சின் ஆணை பிறப்பித்துள்ளார்.

## மாநிலசட்டப்பேரவைகளுக்கு தேர்தல் திகதிகள் அறிவிப்பு

(டில்லி)

அயோத்தியாவில் பாபர் மசூதி வளாகம் தகர்க்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கலைக்கப்பட்ட மாநில அரசுகளுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்களை நடத்துவதற்கு திகதிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மிசோராம மாநிலங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்களுடன் யூனியன் பிரதேசமான புதுடில்லியின் சட்டப் பேரவைக்கும் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

உத்தரப்பிரதேசத்தில் எதிர்வரும் நவம்பர் 18 மற்றும் 21 ஆம் திகதிகளிலும், மத்திய பிரதேசத்தில் நவம்பர் 24, மற்றும் 27ஆம் திகதிகளிலும் வாக்குப் பதிவுகள் நடக்கவுள்ளன. இமாசலப் பிரதேசத்தில் நவம்பர் 9ஆம் திகதியும் ராஜஸ்தானில் நவம்பர் 11-ம் திகதியும், தேர்தல்கள் நடைபெறவுள்ளன. புதுடில்லியில் சட்டப்பேரவைக்கு நவம்பர் 6-ம்திகதியும், மிசோராம் சட்டப் பேரவைக்கு நவம்பர் 30-ம் திகதியும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

மேலும் தேர்தலுக்கான சகல தேர்தல் திகதி அட்டவணைகளையும் தேர்தல் ஆணையகம் வெளியிட்டுள்ளது.

---

**நீரிருந்தால் ஏர் பிடிப்பார்**
**ஏர் பிடித்தால் நெல் கிடைக்கும்**

ஈழநாதம்

# எல்லைப் புறங்களில் புதிய பொலிஸ் அதிபர் அலுவலகம்

(கொழும்பு)

எல்லை மாவட்டங்கள் தோறும் புதிதாக பொலிஸ்மா அதிபர் அலுவலகங்கள் திறந்து செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கும், தென்னிலங்கைக்கும் இடையிலான எல்லை மாவட்டங்களிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் நோக்கிலேயே இந்த அலுவலகங்கள் செயற்பட வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

புத்தளம், அம்பாறை, அனுராதபுரம், பொலநறுவ, மொனராகலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் புதிதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் திறக்கப்பட இருக்கின்றன.

தற்போது கொழும்பில் பணிபுரியும் ஐந்து பொலிஸ்மா அதிபர்கள் இந்த எல்லைப் புற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

புத்தளத்திற்கு புதிய பிரதி பொலிஸ்மா அதிபராக ரீ. எம். லியனகே நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னர் பாதுகாப்பு பிரிவில் பணி புரிந்தவர்.

அனுராதபுரத்திற்கு எஸ். எம். ஏ சுலைமான் புதிய பிரதி பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பிரதம மந்திரியின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டவர்.

பொலநறுவவிற்கு டபிள்யூ. எம். குணதிலக பிரதிப்பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர்.

மொனராகலை பகுதிக்கு எச். ஏ. ஜே. எஸ் கே. விக்கிரமரத்தின பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிந்தவர்.

அம்பாறைக்கு ஏ. ஈ அமரக்கோன் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பொலிஸ் பொது மக்கள் நல்லுறவுப் பிரிவின் பொறுப்பாளராக பணிபுரிந்தவர். இவர் ஜனவரி முதலாம் திகதி இப்பதவியைப் பொறுப்பேற்பார்.

## செஞ்சிலுவை இருக்கும்வரை போர் முடிவுக்கு வராதாம்

(கொழும்பு)

இந்த நாடு பௌத்த சிங்கள நாடு. இந்த நாட்டைப் பிரிப்பதென்றால் சிங்களவனின் பிணத்தின்மீது சென்றுதான் பிரிக்கவேண்டும்.

இவ்வாறு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்க கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்கு இருக்கும்வரையும் இந்தப் போரை முடிக்க முடியாது என பிரிகேடியர் விஜய விமலரட்ன என்னிடம் ஒரு தடவை கூறியுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்[..]னநாயக வழிக்கு வந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் சில தமிழ்க் குழுக்கள் மீது அரசு அளவுக்கதிமான நம்பிக்கை கொள்ளக்கூடாது.

மக்கள் விடுதலை முன்னணிக் கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தன அங்கு பேசும் போது, கடற்படையின் படகுகள் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டபோது, அதில் காணாமல் போன கடற்படையினரின் சாம்பலைக்கூட அப்பகுதியில் பொதுசன சேவையில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பெற முடியாது போயுள்ளது என்றார்.

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ். மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இன்றைய விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்

தமிழீழம்

தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

### தென்மராட்சியில்

தியாகிலெப்டினன்ட்கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்வுகள் தென்மராட்சியில் பல்லாயிரக் கணக்கான மக்களால் மிகவும் எழுச்சி பூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நுணாவில் மணங்குணாப் பிள்ளையார் கோவில் முன்றலில் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சந்தண்ணா தலைமையில் நடைபெற்றது.

நேற்று காலை 7-15 மணியளவில்தென்மராட்சி பொறுப்பாளர்திரு.பரணிஈகைச்சுடரை ஏற்றிவைக்க தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றியதுடன் தென்மராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கலை தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து திரு. பொன் தியாகம் அவர்கள் ஆரம்ப உரை நிகழ்த்தி உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். தியாகி திலீபன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட காலை 10-48 மணிக்கு மக்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய அதே வேளை ஆலய மணியும் ஒலிக்கப்பட்டது. இதன்போது தொலைக்காட்சிமூலம் தியாகி திலீபன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இறுதி நிமிட நிகழ்வு காண்பிக்கப்பட்டது.

நேற்றைய இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வில் 5000ற்கு மேற்பட்ட மக்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டோரும் இவ் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரிப் பகுதியிலிருந்து நாதஸ்வர இசை முழங்க தியாகி திலீபனின் உருவப் படம் தாங்கிய ஊர்தி ஒன்று பிரதான வீதியூடாக உண்ணாவிரத இடத்தை வந்தடைந்தது. இவ் ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான மக்கள்கலந்து கொண்டனர். இதேவேளை கைதடிப் பகுதியிலிருந்து தியாகி திலீபனின் உருவப் படங்களைத் தாங்கியபடி தூக்குக் காவடி, பறவைக் காவடி என்பனவும் ஊர்வலமாக நுணாவிலை வந்தடைந்தன.

மேற்படி உண்ணாவிரத நிகழ்வின்போது வில்லுப் பாட்டு, பஜனைப்பாடல், குழு பாடல்கள் அடங்கிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நண்பகல் 1.00 மணியளவில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி சுடரவள்உரை நிகழ்த்தினார். மாலை 4.00 மணியளவில் அரசியல்பயிற்சிப் பள்ளிப்பொறுப்பாளர்திரு.அரசண்ணா நிறைவுரை ஆற்றியதுடன் உண்ணாவிரதிகளுக்கு நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவு செய்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து மாலை 5.10 மணியளவில தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்திரு சந்தண்ணா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதன் போது திரு. கி. சோமசுந்தரக் குருக்கள், தேவர் அண்ணா தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா. யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, திரு. பாலகுமாரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியாக இரவு 8.00 மணிக்கு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### வடமராட்சியில்:-

வடமராட்சிக் கோட்டத்தில் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இறுதி நாள் உண்ணாநோன்பு நிகழ்வுகள் நேற்று மாலி சந்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

ஆல முன்றலில் அமைக்கப்பட்ட பிரதான பந்தலில் காலை 7.00 மணியளவில் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்விஈகைச்சுடரை ஏற்றிவைத்தார். வடமராட்சி பொறுப்பாளர் திரு. அருணா தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

வடமராட்சி மகளிர் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கிருஜா தலைமையில் நடைபெற்ற இந் நோன்பின் போது தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு வடமராட்சி அரசியற்துறைப்பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து உண்ணா நோன்பு ஆரம்பமானது.

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய பந்தலில் இருந்து அல்வாய் வடக்கு சிற்றூர் மக்கள் தியாகி திலீபனின் உருவப் படம் கொண்ட தேர் போன்ற ஊர்தி ஒன்று பவனியாக இப் பந்தலுக்கு எடுத்து வரப்பட்டது அத்துடன் ஐந்து காவடிகளும் இணைந்து வந்தன. இவ் ஊர்தி எடுத்து வரப்படும் போது வீதி எங்கும் பூரண கும்பங்கள் மக்களால் வைக்கப் பட்டன.

உண்ணாவிரதம் இருந்த மக்கள் திலீபன் உயிர்பிரிந்த நேரம் 10 48 மணிக்கு மவுனஞ்சலி செய்தனர். தொடர்ந்து அரசியற் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. இளையவன், யாழ். மாவட்ட மகளிர் அமைப்

பாதுகாப்பு

தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போது ஏவப்பட்ட எறிகணை ஒன்று யாழ் போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயப் பகுதியான செம்மாதெருவில் உள்ள வீட்டுப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது.

இதனால் அதே இடத்தைச் சேர்ந்த தர்சிகாதேவி (வயது 26), சுப்பிரமணியம் (வயது 63) ஆகியோர் காயமடைந்து யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மேற்படி எறிகணை விழ்ந்து வெடித்ததால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சமிக்ஞை விளக்கு சிதறிக் காணப்படுகிறது.

தியாகி

அடுத்து வரும் ஏழாவது ஆண்டில் நிச்சயமாக மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் ஒருவரும் இருக்க முடியாதநிலை உருவாகும்

எங்களை அழிப்பதற்கு அரசாங்கம் பட்டாளத்தைதிரட்டுகிறது. தமிழ் மக்களை பூண்டோடு அழிப்பது தான் இந்த சிங்கள அரசினதும், சிங்கள் படையினதும் இலக்கும் குறிக்கோளாக இருந்து வருகிறது.

நாங்கள் எவ்வளவு தூரம் போராட்டத்தை விரைவுபடுத்துகிறோமோ அப்போது தான் எமது வாழ்க்கைநிலை சீரடையும். இந்தப் போராட்டத்திற்கு நாங்கள் பூரணமான பங்களிப்பை செய்வோமேயானால் எமது வாழ்வு நிச்சயம் விடியும். அடுத்த உண்ணா நோன்புக்கு முன்பாக நாங்கள் ஒன்றாக இணைந்து விடுதலை பெற்றேயாக வேண்டும் என்றார்.

தொடர்ந்து விடுதலைப்புலிகள் கடற்புலிகளைச் சேர்ந்த திரு மறவன், பெண்கள் புனர்வாழ்வு பொறுப்பாளர் செல்வி சுடர், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர், பருத்தித்துறை சித்தி விநாயகர் கல்லூரி அதிபர் திரு. கந்தசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (போ)

எமது

குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னோடியாக பாரிய யுத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. மிக விரைவில் குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்ட

வித்தார்.

''தமிழ் மக்கள் இருக்கும் வரையும், தமிழ் மண் இருக்கும் வரையும், தமிழ் மொழி இருக்கும் வரையும் தியாகி திலீபனை எவரும் மறக்க முடியாது'' இவ்வாறு மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பேராசிரியர்சண்முகதாஸ் தெரிவித்தார். தற்பொழுதுவாழும்

ஜனநாயக பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்கு இருக்கும்வரையும் இந்தப் போரை முடிக்க முடியாது என பிரிகேடியர் விஜய விமலரட்ன என்னிடம் ஒரு தடவை கூறியுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். கள் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டபோது, அதில் காணாமல் போன கடற்படையினரின் சாம்பலைக்கூட அப்பகுதியில் பொதுசன சேவையில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பெறமுடியாது போயுள்ளது என்றார்.

## தீவக மக்கள் 40 பேர் சொந்த இடம் செல்வர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மற்றும் அனலைதீவைச் சேர்ந்த நாற்பது பேர் இன்று அவர்கள்சொந்தஇடங்களுக்கு கொண்டுசெல்லப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதியன்று இவர்கள்பருத்தித்துறை துறைமுகம் வரை அழைத்துச்செல்லப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் இராணுவ அனுமதி இரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து திரும்பநேரிட்டது தெரிந்ததே.

திருக்கோணமலையில் இருந்து வரும் குமண கப்பல் மூலம் இவர்கள் காங்கேசன் துறைக்கு இன்று அனுப்பப்படுவார்கள் என்றும், எனினும் தீவுப்பகுதிக்கு செல்வதற்கான இராணுவஅனுமதி மீள வழங்கப்படுமா என்பது பற்றி எதுவும் தெரியவரவில்லைஎன்றும் தெரியவருகிறது.

## உடுவில் பகுதி முகாம்களில் கொலரா தடுப்பு நடவடிக்கை

[சுன்னாகம்]

உடுவில் பகுதியில் இரு கொலரா நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, இடம் பெயர்ந்தோர் முகாம்கள் அதிகமுள்ள இப்பகுதியில் பலமுன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவும் இணைந்து 40 சுகாதார தொண்டர்களுக்கான 06 மணித்தியால நடவடிக்கை கருத்தரங்கொன்றை நாளை இணுவிலில் நடாத்தவுள்ளது. பயிற்சி பெறும் தொண்டர்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் ஒவ்வொன்றுக்கும் இருவராக முழுநேரப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதே வேளை எதிர்வரும்செவ்வாய்க்கிழமை மேற்படி முகாம்களில் காரணிகளை இனங்காணும் பணியினை சுகாதாரவைத்திய பணிமனையும் செஞ்சிலுவைச சங்கமும் மேற்கொள்ளவுள்ளன. (11)

---

## மரண அறிவித்தல்

வைத்திய கலாநிதி

### அண்ணாமலை நரசிங்கம்

வட்டுக்கோட்டை

வைத்திய கலாநிதியும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான அண்ணாமலை நரசிங்கம் (சிவப்பிரகாசம்) இறைபதமடைந்து விட்டார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், திரு பா. திருமாறனின் வளர்ப்புத் தந்தையுமாகும். அன்னாரது இறுதிக் கிரியைகள்(27-9 93) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலைநகர் வீதி, வட்டுக்கோட்டை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. திருமாறன்
யாழ். மருத்துவபீட மாணவன்
(மருமகன்)

[6115]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கூட்டம்

யாழ். மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இன்றைய விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும். (22)

## நவம்பரில் கல்வியாண்டு

புதிய கல்வியாண்டு (1992-93] வழமைபோல் நவம்பர் மாத இறுதிப்பகுதியில் நடைபெறும். இதில் எவ்வித மாற்றமும் இல்லையென யாழ். பல்கலைக் கழக பதிவாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். [05]

---

படிப்படியாக முடியாதநிலையில் இந்தியாவின் காலில் போய் வீழ்ந்தது. சிறிலங்காவிற்குள் காலடி வைப்பதற்கானசந்தர்ப்பத்தை பலகாலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த இந்திய அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டது என்றார்.

தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்திய திரு. பாலகுமாரன் அவர்கள் திலீபன் அடிப்படையில் ஓர் அகிம்சைவாதி அல்ல. அவருடைய அடிப்படைக் கோட்பாடே ஆயுதப்போராட்டம்தான். விடுதலைப் புலிகள் தேவைக்கு ஏற்ப சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு, போராட்ட வடிவங்களை மாற்றி எந்தவழியில் போராட வேண்டுமோ அந்த வழியில் போராடக்கூடியவர்கள் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியவர்தான் திலீபன்

எமது விடுதலையை நாம் எமது சொந்தக் காலில்நின்று போராடித்தான் பெறவேண்டுமே தவிர வேறு எந்தவொருவரையுமோ அல்லது இந்தியாவையோ நம்பியிருக்க முடியாது என்பதை ஏற்கனவே திலீபன்கூறியிருந்தார். ஆனால் அதை 1987ம் ஆண்டின் பின்னர் தான் நாம் அனைவரும் புரிந்து கொண்டோம்.

திலீபனின் வீரச்சாவைத் தொடர்ந்து எமது விடுதலைப் போராட்டமானது புதுவடிவம் பெற்றது. அகிம்சைப் போராட்டத்தில் அவன் பெற்ற வெற்றியானது உலக அரங்கிலே இந்தியாவிற்கு ஒரு தலை குனிவையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. இன்றுவரை அந்த அவமானத்திலிருந்து இந்தியாவால் மீள முடியவில்லை. எம்மிடம் இந்தியா படித்துக் கொண்ட பாடத்தை இலகுவில் மறந்துவிடாது. அதனால் அது மீண்டும் எம் மண்ணை ஆக்கிரமிக்கும் எனக் கூறுவது அர்த்தமற்ற தொன்றாகும் என்றார்.

குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னோடியாக பாரிய யுத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. மிக விரைவில் குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கியும் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கும் அரசு தயாராகி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறான சூழ்நிலையில் உறுதியுடன் இருக்கின்றனர். இவ்வாறான இராணுவ தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு எந்த நேரமும் தயாராகவே உள்ளனர். இந்த நிலையில் ஒரு முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ள வேண்டும். இதற்காக மக்கள் அனைவரும் எந்த நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி பேசும் போது தியாகி திலீபன் நடாத்திய தியாகம் செறிந்த அகிம்சைப் போராட்டம் உலகில் எங்கும் இதுவரை நடைபெறவில்லை. திலீபனின் இத்தியாகம் நிறைந்த போராட்டம் உலக விடுதலைப் போராட்டங்கள் அனைத்துக்கும் முன்னுதாரணமாகும். இத்தியாகத்தின் முன் நாம் தலை வணங்கி நிற்கின்றோம். எனவே நாம் அனைவரும் திலீபனின் கனவை நனவாக்குவதற்கு போராட வேண்டும் என்று தெரிவித்தார்.

''அகிம்சையின் எல்லை வரை சென்று தன்னுயிரையே தியாகம் செய்து எமது தாயக விடுதலைப் போராட்டத்துக்கு எழுச்சியூட்டியவன் திலீபன். அத்துடன் தனது தியாகத்தின் மூலம் இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரையை கிழித்தெறிந்தவன் திலீபன்'' இவ்வாறு கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஆதவன் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

''தியாகி திலீபன் வரலாற்று அத்தியாயங்களில் மரணமடையவில்லை என்றென்றும் அங்கே திலீபன் உயிருடன் இருக்கிறார்'' இவ்வாறு மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யோகப் அடிகள் தெரிவித்தார். தியாகி திலீபனின் பாதையைப் பின்பற்றி நீதிக்காகவும், சமாதானத்துக்காகவும், அமைதிக்காகவும் நாம் புரட்சி செய்ய வேண்டும் அதற்காக எம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும். என்றும் அவர் மேலும் தெரி

தமிழ் மக்கள் இருக்கும் வரையும், தமிழ் மண் இருக்கும் வரையும். தமிழ் மொழி இருக்கும் வரையும் தியாகி திலீபனை எவரும் மறக்க முடியாது'' இவ்வாறு மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பேராசிரியர்சண்முகதாஸ் தெரிவித்தார். தற்பொழுதுவாழும் மக்கள் மட்டுமல்ல எதிர்காலத்தில் வாழப்போகும் மக்களும் தியாகி திலீபனை மறக்கமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

''தியாகம் செறிந்த அகிம்சைப் போராட்டம் நடாத்தி உலகுக்கேஉதாரணம் கற்பித்த தியாகி திலீபன் கண்ட கனவு தற்பொழுது நனவாகி வருகிறது தமிழீழ மக்கள் பெரும் புரட்சிக்கு தயாராகி வருகின்றார்கள்'' இவ்வாறு அரசியல் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா கூறினார். இக் கூட்டத்தில் இந்து சமயக்குருக்கள் சங்கத்தைச் சேர்ந்த திரு. சோமசுந்தரக்குருக்கள் அவர்களும் உரைநிகழ்த்தினார்.

இந்தியாசமூக விரோதகும்பல்கள் மூலமாக எம் போராளிகளை அழிக்க முனைந்தது அவ்வேளை எமது போராட்டத்தின் உன்னதத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட திலீபன் உண்ணா விரதத்தை மேற்கொண்டான் இவ்வாறு நேற்று நண்பகல் நல்லூரில் தியாகி திலீபன் நினைவுநாள் தொடர்பாக கருத்துரைவழங்கிய நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

ஐந்து அம்சகோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதமிருந்த திலீபன் காந்திய நாடு என உலகத்தால் நம்பப்பட்ட இந்தியாவை அது காந்தீய நாடல்ல தமிழரை அழிக்கவே இங்கு வந்தது என உலகிற்கு எடுத்துக்காட்டினான் என அவர் மேலும் தெரிவித்தார்.

''பள்ளி மாணவர்களை படையில் சேரும்படி சிங்களப் படை அதிகாரிகள் கேட்டுவருகின்றனர்'' இவ்வாறு நேற்று நல்லூரில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை முடித்து வைத்துநிறைவுரை நிகழ்த்திய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது சிங்கள அரசு தமிழீழத்தின் மீது பாரிய படையெடுப்பை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் தியாகி திலீபன் கூறியதன்படி மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும். இளைஞர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் போராட்டத்தில் இணைந்து ஆயுதம் ஏந்துவதற்கு தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருந்த மக்கள் திலீபன் உயிர்பிரிந்த நேரம் 10 48 மணிக்கு மலர் தூவி அஞ்சலி செய்தனர். தொடர்ந்து அரசியற் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. இளையவன், யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, திரு.தேவர் ஆகியோரின் நினைவுக் கருத்துரைகள் இடம்பெற்றன. மற்றும்கவிதை, கட்டுரை, கவியரங்கங்களும் இடம் பெற்றன.

இப் பந்தல் உண்ணாநோன்பில் கலந்துகொண்ட மக்களால் நிறைந்து வழிந்தன. அடுத்து மாலை 4.00மணிக்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் நீராகாரம் வழங்கிஉண்ணாநோன்பை முடித்து வைத்தார்.

தொடர்ந்து 5 மணிக்கு வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு பா. பைந்தமிழன் தலைமையில் பொதுக் வாழ்வு பொறுப்பாளர் செல்வி சுடர், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர், பருத்தித்துறை சித்தி விநாயகர் கல்லூரி அதிபர் திரு. கந்தசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (யோ)

---

கூட்டம் ஆரம்பமானது இக் கூட்டத்தின் போது விடுதலைப் புலிகள் கடற்புலிகளைச் சேர்ந்த திரு. மறவன், பருத்தித்துறை சித்தி விநாயகர் கல்லூரி அதிபர் திரு: கந்தசாமி, பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி சுடர், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(க) (பா) (ச) (நி) (யோ)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 26-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11042

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-1857, 24-1040, 24-2680, 26-1580, 26-7068,
24-3258, 26-1376, 42-3114, 24-5127, 24-5241,
24-0416, 24-8391, 26-4874, 24-4465, 42-3514,
27-1375, 26-9201, 27-9030, 28-1928, 41-5583.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை.

---

## மரண அறிவித்தல்

### வைத்தியர் அண்ணாமலை நரசிங்கம் (சிவப்பிரகாசம்)

(இளைப்பாறிய ஆசிரியர்-கலைநகர், சித்தன்கேணி)

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த வைத்தியர் அண்ணாமலை நரசிங்கம் (சிவப்பிரகாசம்-இளைப்பாறிய ஆசிரியர்) (26 9-93) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். (27-9-93) இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில்ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் நவாலி வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி க. நரசிங்கம் (மனைவி)
பா. திருமாறன் (மருமகன்)

கலைநகர்
வட்டு-கிழக்கு,
சித்தன்கேணி. (6114)